# தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மகளிர் நலன் பாதுகாக்கப்படவும், வாழ்க்கை தரம் உயர்த்தபடவும், பண்பு உணர்வு குறித்த மகளிர் நிலை உயர்த்தவும் அரசுக்கு தக்க நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கவும் அரசு ஆணை எண். 72, நாள் 19.03.1993 முதல் அரசால் நிறுவப்பட்டது. மகளிர் ஆணையத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்க தீர்மானித்து, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் சட்டம் 2008 கொண்டுவரப்பட்டது. இந்த சட்டம் அரசு வெளியீட்டில் 27.5.2008 அன்று வெளியிடப்பட்டு 30.7.2008 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

**மகளிர் ஆணைய முக்கிய நோக்கங்கள் :**

1. மகளிர் நலன்கள் பாதுகாத்தல்
2. பண்பு உணர்வு குறித்த மகளிர் நிலை உயர்த்துதல்
3. அரசுக்கு தக்க நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தல்

**மகளிர் ஆணையத்திற்கு கீழ்கண்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது :**

- அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்பான அனைத்து பொருள் குறித்து விசாரித்து ஆய்வு செய்தல்.

- பெண்களின் மேற்கண்ட பாதுகாப்பு உரிமைகளை நன்முறையில் பேண தேவையானபோதெல்லாம் உரிய பரிந்துரை மற்றும் அறிக்கைகளை மாநில அரசுக்கு அளித்தல்.

- அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் பெண்கள் தொடர்பாக உள்ள இதர சட்டங்களின் பிரிவுகளை அவ்வப்போது ஆய்வு செய்து அவற்றில் இருக்கும் குறைகளையும், விடுபட்ட இனங்களையும் சரிசெய்வதற்கு, சட்ட திருத்தங்களை அரசுக்குப் பரிந்துரைத்தல்.

- பெண்களின் உரிமைகளில் சட்ட மீறல்கள் இருந்தால், தக்க அதிகாரம் பெற்றவர்களை அணுகுதல்.

- கீழ்க்கண்ட புகார்களை கவனித்தல்

  - மறுக்கப்படும் பெண் உரிமை

  - பெண்களுக்கான பாதுகாப்புச் சட்டங்களைச் சரிவர நடைமுறைப்படுத்தாமை.

- பெண்களின் சம உரிமை மற்றும் மேம்பாடு தொடர்பான நோக்கங்களை அடைதல்

- பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் மற்றும் பல பாலின வேறுபாடுகள் பற்றிய பிரச்சனைகள் போன்றவற்றை சிறப்பு ஆய்வு செய்து தீர்வுகளை பரிந்துரைத்தல்.

- அனைத்துத் துறைகளிலும் பெண்கள் நிலைப்பாடு கொள்ளவும், அவர்கள் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள காரணங்களைக் கண்டறிவதற்கும், கல்வி ஆராய்ச்சி மேற்கொள்ளல்.

- பணிபுரியும் பெண்கள் விடுதிகள், தங்கும் விடுதிகள், காப்பகங்கள், கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சிறைச்சாலைக் கூடங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணித்து நடவடிக்கை எடுப்பது.

- மகளிர் மற்றும் பொதுமக்களிடையே மகளிரின் உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

**மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள்**

வரதட்சணைக் கொடுமை, குடும்ப வன்முறை, பாலியல் கொடுமை, பணிபுரியும் இடத்தில் பாலியல் வன்முறை, இருதாரமணம், சாதிக் கொடுமை, சொத்துத் தகராறு, வன்கொடுமை காரணமாக மரணம், பணமோசடி, அச்சுறுத்தல் போன்ற சமூக கொடுமைகளுக்கு ஆளாகும் பெண்களிடமிருந்து வரப்பெறும் மனுக்கள் மீது தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இன்னல்களுக்கு ஆளாகும் பெண்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அதற்கு தகுந்த ஆலோசனை ஆணையத்தின் தலைவி அவர்கள் வழங்கி வருகிறார்கள்.